# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்
பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை
ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்
ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | மதுரை | காலம் : | 30/03/2022 | முதல் | 03/04/2022 |
| அறிக்கை எண் : | 025/ 2022 | வெளியீட்டு நாள் : | | 29/03/2022 | |

## மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 38° - 40° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (25.03.2022 முதல் 28.03.2022) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 03-04-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 25/03 | 26/03 | 27/03 | 28/03 | தேதி | நாள்-1 30/03 | நாள்-2 31/03 | நாள்-3 01/04 | நாள்-4 02/04 | நாள்-5 03/04 |
| 0.0 | 0.0 | 0.3 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 38 | 38 | 37 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 38 | 39 | 39 | 39 | 40 |
| 25 | 25 | 26 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 25 | 25 | 25 | 25 | 25 |
| 5 | 4 | 4 | 4 | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 4 | 4 | 4 | 4 |
| 80 | 78 | 67 | 57 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 47 | 37 | 47 | 45 | | 45 | 45 | 45 | 45 | 45 |
| 12 | 8 | 9 | 5 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 4 | 4 | 4 | 4 | 4 |
| தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | **காற்றின் திசை** | **தென் கிழக்கு** | தென்மே ற்கு | **தென் கிழக்கு** | **தென் கிழக்கு** | **தென் கிழக்கு** |

## குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலையானது 38°- 40° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 25° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 4 கி.மீ வேகத்தில், தென்கிழக்கு மற்றும் தென்மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

### அதிகபட்ச வெப்பநிலை :

அடுத்த 7 நாட்களுக்கு மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 30° செல்சியஸ் முதல் 34°செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

### குறைந்தபட்ச வெப்பநிலை :

குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில், மாவட்டத்தில் அடுத்த 7 நாட்களுக்கு பொது வாக
இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**இடி மின்னல் எச்சரிக்கை:**

தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மார்ச் 30 தேதி இடி மின்னலுக்கான வாய்ப்பு உள்ளது. கால்நடைகளை பாதுகாப்பான இடங்களில் கட்டி வைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : கரும்பு, வெங்காயம், கால்நடை.**

**கரும்பு:**

தற்போது நிலவும் வெப்பநிலையில் கரும்பு பயிரிடுவதில் ஏற்படும் நீர் பற்றாக்குறையை மேலாண்மை செய்தல் முக்கியமானதாகும். நீர் பற்றாக்குறையை சரிகட்ட சுண்ணாம்புக் கரைசலில் (80 கிலோ சுண்ணாம்பை 400 லிட்டர் நீரில் கரைத்து கிடைக்கும் கரைசல்) கரும்பு கரணைகளை விதைக்கும் முன் ஒரு மணி நேரம் நனைத்து வைத்திருந்து 30 செ.மீ. ஆழத்தில் நடவு செய்ய வேண்டும். பின்பு நீர் பற்றாக்குறை காலங்களில் பொட்டாஷ் மற்றும் யூரியா 2½ சதவிகித கரைசல் ஒவ்வொன்றையும் (15 லிட்டர் நீரில் கரைத்து கிடைக்கும் கரைசல்) தெளிக்க வேண்டும். நீர்ப்பற்றாக்குறையான சூழ்நிலைகளில் மாற்று சால் மற்றும் சால் விட்டு சால் பாசன முறைகளைக் கையாளுவது நல்லபலனை கொடுக்கும்.

**வெங்காயம்:**

தற்போது நிலவும் பருவசூழ்நிலையில் வெங்காயப் பயிரில் அடிச்சாம்பல் நோயின் தாக்குதல் பரவலாக தென்பட வாய்ப்பு உள்ளது. இந்நோயின் தாக்குதலால் வெள்ளை நிற அடிச்சாம்பல் வளர்ச்சி இலையின் மேற்புறத்தில் காணப்படும், முடிவில் இலைகள் காய்ந்துவிடும். இதனை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 350 கிராம் என்ற அளவில் பிரோப்பினெப் மருந்தினை தண்ணீருடன கலந்து தெளிக்க வேண்டும். பின் 10 நாட்கள் கழித்து 10 லிட்டர் தண்ணீருக்கு 100 கிராம் சூடோமோனாஸ் மற்றும் 10 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும்

**கால்நடை:**

தற்போது நிலவும் வெப்பமான வானிலையில் மாடுகளை அடைப்பான் நோய் தாக்க வாய்ப்பு உள்ளது. இந்நோய் தாக்கப்பட்ட மாடுகளுக்கு காய்ச்சல் இருக்கும். மாடுகளில் உணர்வு இழப்பு ஏற்பட்டு பிறகு இறந்து விடும். இறந்தவுடன் மூக்கு, வாய், ஆசனம் போன்றவற்றிலிருந்து கருமை நிறமான இரத்தம் வெளியேறும். இந்நோயில் இருந்து தங்கள் கால்நடைகளைக் காப்பாற்ற வருடத்திற்கு ஒரு முறை அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி அடைப்பான் நோய்க்கான தடுப்பூசிகளை போடவேண்டும்.